<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.81/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.6<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோவிந்தராஜ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ரத்தினசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.06.2024

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது உடுமலை காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.09.2021ம் தேதி மதியம் 02.00 மணி அளவில் உடுமலை காவல் நிலைய ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் அவர்களுடன் நானும், என்னுடன் மகளிர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திருமதி. பாதம்பியா, அவருடன் பெண் தலைமைக்காவலர் திருமதி. சாவித்தி ஆகியோருடன் மது, சூது மற்றும் பிராத்தல் சம்பந்தமாக ரோந்து செய்தபோது ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் மதியம் சுமார் 15.00 மணி அளவில் சேரன் நகர் அருகே உள்ள வெற்றிவேல் நகருக்கு சென்று சரன்யா, பானுப்பிரியா, கருப்புசாமி ஆகியோர்கள் எங்களை கண்டவுடன் ஓட எத்தனித்தவர்களை அவர்களை பிடித்தேன். வீட்டிற்குள் சென்றபோது அங்கு ரேவதி மற்றும் தினையரசன் என்கிற புகழ் ஆகியோர்களை விசாரித்துபோது அங்கு பிராத்தல் தொழில் நடந்த விவரம் தெரிய வந்தது. அதன் பின்னர் மதியம் சுமார் 16.00மணி அளவில் ரேவதி என்பவரிடம் பணம் ரூ.200/–கைப்பற்றினோம்.

2. தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும், பெண் காவலர்

சாவித்திரியும் சாட்சியாக இருந்து கைப்பற்றுதல் மகசரில் கையெழுத்து செய்தோம். கைப்பற்றுதல் மகசர் **அசாஆ.4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. பின்பு 16.30 மணிக்கு கருப்புசாமி, சரண்யா ஆகியோர்களை பிராத்தல் தொழில் நடத்த அவர்கள் மூலம் தான் ஏற்பாடு செய்ததால் அவர்களை கைது செய்து 17.00 மணிக்கு உடுமலை அனைத்து மகளிர் காவல் நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்தார்கள். பின்பு 17.45 மணிக்கு கருப்புசாமி என்பவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்து நானும், பெண் தலைமைக்காவலர் சாவித்திரியும் சாட்சி கையொப்பம் செய்தோம். 19.00 மணிக்கு சரண்யா என்பவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்து நானும், பெண் தலைமைக்காவலர் சாவித்திரியும் சாட்சி கையொப்பம் செய்தோம். OPPO A15 செல்போனை சரண்யாவிடம் இருந்து ரேவதியிடம் இருந்து பணம் 200/-யும் கைப்பற்றினார்கள். ஆய்வாளர் முன்னிலையில் நான் கையொப்பம் செய்தேன். ஆய்வாளர் இது சம்பந்தமான என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எத்தனை மணி வரை இருந்தீர்கள் என்றால் மதியம் 15.00 முதல் 16.30 மணி வரை. அன்றைய தினம் எத்தனை மணி வரை ரோந்தில் இருந்தோம் என்றால் 02.00 மணிக்கு புறப்பட்டு 03.00 மணி வரை. எந்த பகுதி என்றால் உடுமலையின் அனைத்து பகுதிகளிலும். ஒரு மணிநேரத்தில் அனைத்து பகுதிகளுக்கு ரோந்து செல்ல இயலுமா என்றால் இயலும்.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீடு தெற்கு பார்த்த வீடா என்றால் வடக்கு பார்த்த வீடு. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டில் எத்தனை அறை இருந்தது என்றால் மொத்தம் இரண்டு அறை கொண்ட 4 அறை. வீடு பரிசோதிக்க வாரண்ட் வைத்திருந்திர்களா என்றால் வைத்திருந்தோம். அதனை குறித்து இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் விவரம் தெரியவில்லை.

3. சம்பவம் நடந்ததா சொல்லப்படும் பகுதி வீடுகள் நிறைந்த போக்குவரத்து உள்ள பகுதி என்றால் சரிதான். கைது செய்துவிட்டு எதிரிகளுடன் இருந்தீர்களா என்றால் இருந்தேன். பணம் ரூ.200/- என்ன நோட்டுக்கள் இருந்தது என்றால் ஒரே ஒரு 200 ரூபாய். செல்போனின் சிம் நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. சிம் இருந்ததா என்றால் இருந்தது. அதன் IMI நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் கையொப்பம் பெற்ற கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண் குறிப்பிட்டு இருந்ததா என்றால் குறிப்பிட்டிருந்தது. எதன் அடிப்படையில் குற்ற எண் தெரிந்து கொண்டீர்கள் என்றால் வழக்கை விசாரித்தபோது.

4. கைது குறிப்பாணை எங்கு பிரிண்ட் எடுக்கப்பட்டது என்ற விவரம்

தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு தெரிந்த எந்த நபர்களிடம் கையெழுத்து வாங்கினிர்கள் என்றால் சரண்யா மற்றும் கருப்புசாமி. சித்தகோட்டை பகுதியில் VAO அலுவலகம், அரசு பள்ளி உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளார்கள் என்றால் ஆமாம். உடுமலை பகுதியில் VAO அலுவலகம், அரசு பள்ளி உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளார்கள் என்றால் ஆமாம்.

5. நீங்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், எதிரியிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், நீங்கள் இந்த வழக்கின் ஆவணத்தை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்திர்கள் என்றாலும், உங்கள் மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றாலும் சரியல்ல. நீங்கள் கைப்பற்றப்பட்ட பணத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.